**தலைப்பு 265 - மன்னார் மாவட்ட செயலகத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

மன்னார் மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 செப்தெம்பர் 22 ஆம் திகதி மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

---

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

#### (அ) மொத்த ஏற்பாடும் செலவும்

---

மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா389.32 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 311.70 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த மொத்தத்தேறிய நிதி ஏற்பாட்டின் ரூபா 77.62 மில்லியன் அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 20 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறு.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 195.22 | 193.40 | 1.82 | 01 |
| மூலதனம் | 194.10 | 118.30 | 75.80 | 39 |
| **மொத்தம்** | **389.32** | **311.70** | **77.62** | 20 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

ஏனைய 15 அமைச்சுக்கள் மற்றும் 08 திணைக்களங்களினால் ரூபா 2,740.75 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,572.73 மில்லியன் பயன்படுத்தப்பட்டது. இதன்படி, ரூபா 1,168.03 மில்லியன் கூட்டுத்தொகையான 17 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய 26501 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பில் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ள படியானது | இழிவு எல்லை | உள்ள படியானது | உச்ச எல்லை | உள்ள படியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 12.5 | 11.5 | 7.5 | 10.5 | 45 | 39.2 |

## 2.3 பொதுவைப்பு கணக்கு

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் 6003/0000/00/0041/0000/00 ஆம் இலக்க பொதுவைப்பு கணக்கு மீதி ரூபா 15.56 மில்லியனாகக் காணப்பட்டது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

மன்னார் மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இந்த அறிக்கையின் பந்தி 1.1 இல் தெரிவிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையிலுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களிற்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது. இந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகளைப் பேணாமை

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வை பார்த்தலின் போது மன்னார் மாவட்டச் செயலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| பதிவேடு | தொடர்புடைய நிதி பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| பிணை இடாப்பு | நிதி பிரமாணம் 891 | பேணப்பட்டிருக்கவில்லை |
| குறுகிய நேர விடுமுறை பதிவேடும் தாமத வருகைப் பதிவேடும் | 1994 சனவரி 21 ஆம் திகதிய 06/94 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை. | பேணப்பட்டிருக்கவில்லை |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்

மாவட்டச் செயலகத்தின் மூன்று மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவின விடயங்களில் 12 சதவீதம் தொடக்கம் 73 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 2,414,585 கூட்டுத்தொகையான சேமிப்புக்கள் காணப்பட்டமையினால் குறித்த ஆண்டிற்கான பாதீடானது ஓர் சீரான நிதித் திட்டமிடலாக இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

26501 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் ஓய்வுபெற்ற ஐந்து உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 486,681 தொகையான நிலுவை மீதியினை அறவிடுவதற்கோ அல்லது தேவையான சீராக்கங்களை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தின் DMA/2009(1) ஆம் இலக்க 2009 யூன் 09 ஆந் திகதிய சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம் வருடத்திற்கு குறைந்தது 04 தடவைகளேனும் உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்தும் நோக்குடன் கூட்டப்படுதல் வேண்டிய போதிலும், மன்னார் மாவட்டச் செயலகத்தினால் 03 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

மாவட்டச் செயலகத்திற்குரிய பின்வரும் சொத்துக்கள் பயன்படுத்தாது வைக்கப்பட்டிருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| சொத்து விபரம் | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி | பயன்படுத்தாதிருந்த காலப்பகுதி |
|---|---|---|---|
| | | ரூபா | ஆண்டுகள் |
| நிலம் | 02 | 1,100,000 | - |
| கட்டிடங்கள் | 17 | கிடைக்கப் பெறவில்லை | 04 - 50 |
| மோட்டார் வாகனங்கள் | 03 | -மேற்படி- | 05 |
| மோட்டார் சைக்கிள் | 07 | -மேற்படி- | 02 |
| நீர் சுத்திகரிப்பான் | 05 | -மேற்படி- | 01 |
| நீர் சுத்திகரிக்கும் இயந்திரம் | 04 | 312,800 | 02 |
| கண்ணாடி அலுமாரி | 01 | கிடைக்கப் பெறவில்லை | - |
| நீர்த்தாங்கி | 06 | -மேற்படி- | 06 மாதங்கள் |

## 3.6 இணக்கமின்மை

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| ------------------------------------------ | -------- | ------------------------------ |
| | (ரூபா) | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | |
| ------------------------------------- | | |
| (i) நிதிப்பிரமாணங்கள் 136, 137, 138, 139 மற்றும் 257 | 1,876,780 | மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தினால் ரூபா 1,876,780 தொகையான 03 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் உரிய முறையில் அங்கீகரிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத் தப்படாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 139 (2), (3), (4) | 162,000 | மாந்தை மேற்கு பிரதேச செயலகத் தினால் ரூபா 162,000 பெறுமதியான கொடுப் பனவுகளை மேற்கொள்கையில் அவற்றுக்காக பற்றுச்சீட்டுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக் கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணங்கள் 880 மற்றும் 881 | - | மாவட்டச் செயலகத்திலும் 05 பிரதேச செயலகங்களிலும் பணிபுரியும் 43 உத்தியோகத்தர்கள் மற்றும் 03 சாரதி களிடமிருந்து பிணைகளைப் பெற்றுக் கொள்வதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கைகள்** | | |
| ------------------------------------- | | |
| (i) 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றிக்கை | - | மாவட்டச் செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களின் 10 வாகனங்களின் எரிபொருள் நுகர்வு ஒவ்வொரு ஆறு மாதங்களிலும் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றிக்கை | 9,189 | விடுமுறை நாள் சம்பளங்கள் செலுத்தப்படும் விடயத்தில் விரலடையாளப் பதிவு இயந்திரங்களின் மூலம் நேரம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். இருந்த போதிலும், மன்னார் பிரதேச செயலகத்தினால் விரலடையாளப் பதிவு இயந்திரங்களின் நேரத்தினைக் கருத்திற்கொள்ளாது ரூபா 9,189 தொகை விடுமுறை நாள் சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) 1994 சனவரி 21 ஆந் திகதிய 06/94 ஆம் இலக்க சுற்றிக்கை | - | 2015 டிசெம்பர் மாதம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் 45 அலுவலகர்களின் தாமத வருகைகள் தொடர்பாக மாவட்டச் செயலகத்தினால் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.7 செயற்திட்ட அமுலாக்கலின் நலிவுகள்**

---

மாவட்டச் செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள்**

---

ரூபா 100 மில்லியன் பெறுமதியில் மதிப்பிடப்பட்ட மாவட்டச் செயலக கட்டிடத் தொகுதியின் நிர்மாண வேலைகள் (கட்டம் - I) 2015 திசம்பர் 31 ஆந் திகதி முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 82.74 மில்லியன் செலவிடப்பட்ட பின்னரும் செயற்றிட்டமானது பூரணப்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) உரிய முறையில் நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்**

---

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**அகத்தி முறிப்பு பாலர் பாடசாலை நிர்மாணம்**

---

(i) பாலர் பாடசாலை தொடர்பாக மதிப்பிடப்பட்ட கணியத்தாள் உருப்படிகளிலுள்ள (உருப்படி இல. 05, 07, 08, 09, 11, 14, 15, 17) வேலைகளின் பெறுமதிக்கும், ஒப்பந்ததாரரினால் நிறைவேற்றப்பட்ட வேலைகளின் பெறுமதிக்கும் இடையில் ரூபா 241,106 வேறுபாடு காணப்பட்ட போதிலும், அதற்குத் தேவையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) கணியத்தாள் உருப்படி இலக்கம் 16 இலுள்ள ரூபா 55,390 பெறுமதியான கட்டிடத்தின் உட்புற, வெளிப்புற சுவர்களுக்கு தீந்தை பூசுதல் வேலை ஒப்பந்த தாரரால் நிறைவேற்றப்படாமையால், பாலர் பாடசாலையினை முழுமையாகப் பயன்படுத்த முடியாதிருந்தது.

**சின்ன புள்ளச்சி பொற்கேனி சனசமூக நிலைய நிர்மாணம்**

---

(i) சனசமூக நிலையம் தொடர்பாக மதிப்பிடப்பட்ட கணியத்தாள் உருப்படிகளிலுள்ள (உருப்படி இல. 07, 09, 11, 14, 15, 18, 21) வேலைகளின் அளவுக்கும், ஒப்பந்ததாரரினால் நிறைவேற்றப்பட்ட வேலை களின் அளவுக்கும் இடையே காணப்பட்ட ரூபா 235,267 வேறுபாடு தொடர்பில் தேவையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) கணியத்தாள் உருப்படி இல. 16 மற்றும் 22 இலுள்ள முறையே ரூபா 55,390, ரூபா 8,500 பெறுமதியான கட்டிடத்தின் உட்புற மற்றும் வெளிப்புற சுவர்களுக்கு தீந்தை பூசுதல் மற்றும் கதவுக்கான பூட்டினை பொருத்துதல் போன்ற வேலைகள் ஒப்பந்ததாரரால் நிறைவேற்றப்படாது இருந்தமையினால், சனசமூக நிலையத்தினை முழுமையாக பயன்படுத்த முடியாதிருந்தது.

**தலைமன்னார் வீட்டுத்திட்ட வீதியினை திருத்தியமைத்தல்**

---

குறித்த வீதியினை புனரமைப்புச் செய்கையில் கிறவல் பரவுதல் வேலைக்கு உருளையினை பயன்படுத்தி வீதி செப்பனிடப்படாமையால் (Compaction) மழை நீரில்

அடித்துச் செல்லப்பட்டு வீதி குன்றும், குழியுமாக இருந்தது. மேலும் மழைகாலத்தில் வீதியானது சதுப்பாக மாறிவிடுவதால் வீதியை பயனாளிகள் பயன்படுத்த முடியாதிருந்தது. இதனால் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 851,630 தொகை ஒரு பயனற்ற செலவினமாக காணப்பட்டது.

**எருக்கலம்பிட்டி கல்லடி வீதியினை திருத்தியமைத்தல்**

-----------------------------------------------------------------------

(i) குறித்த வீதியின் 950 மீற்றரை புனரமைப்பதற்காக ரூபா 976,930 செலவிடப்பட்டிருந்த போதிலும், 500 மீற்றர் நீளமான பிரதான வீதியும், 115 மீற்றர் நீளமான உப வீதியுமாக மொத்தம் 615 மீற்றர் நீளமான வீதியே புனரமைக்கப்பட்டிருந்தது.

(ii) புனரமைக்கப்பட்ட வீதியின் முடிவிலுள்ள ஏறத்தாழ 100 மீற்றர் மழை நீரினால் அடித்துச் செல்லப்பட்டு பள்ளமாக இருந்தது. அத்துடன் வீதியின் அகலம் 3.5 மீற்றர் ஆக காணப்பட வேண்டிய போதிலும், 115 மீற்றர் நீளமான வீதியின் அகலம் 2.5 மீற்றர் ஆக மாத்திரம் காணப்பட்டது.

(iii) குறித்த வீதியினை புனரமைக்கையில் பயன்படுத்தப்பட்ட கிறவலின் உண்மையான அளவு $318.45m^3$ ஆகக் காணப்பட்ட போதிலும், அளவுத்தாளில் (Measurement Sheet) $399m^3$ எனக் காட்டப்பட்டிருந்தமையால் $80.55m^3$ கிறவலிற்காக ரூபா 140,455 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

**ஆட்காட்டிவெளி பொதுநோக்கு மண்டப நிர்மாணம்**

-----------------------------------------------------------------------

(i) பொது நோக்கு மண்டபம் தொடர்பாக மதிப்பிடப்பட்ட கணியத்தாள் உருப்படிகள் (உருப்படி இல. 16, 21, 22) இலுள்ள வேலைகளின் பெறுமதிக்கும் ஒப்பந்ததாரரினால் நிறைவேற்றப்பட்ட வேலைகளின் பெறுமதிக்கும் இடையே ரூபா 190,330 வேறுபாடு காணப்பட்டது. இருப்பினும் அதற்குத் தேவையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) மண்டப வேலைக்கான கணியத்தாளிலுள்ள (BOQ) இல. 21 இனை குறிக்கும் வேலையின் உண்மையாக நிறைவேற்றப்பட்ட அளவு, அளவுத் தாளில் (Measurement Sheet) கூடுதலாக காட்டப்பட்டிருந்தமையால், ரூபா 84,312 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(iii) மண்டப நிர்மாண வேலைகள் 2015 ஒக்டோபர் 14 ஆம் திகதி நிறைவடைந்திருந்த போதிலும், மண்டபத்தின் யன்னலுக்கு பொருத்த வேண்டிய கதவுகள் பொருத்தப்படாது மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தன. இருப்பினும், இதற்காக ரூபா 63,000 செலுத்தப்பட்டிருந்தது.

**3.8 வங்கிக்கணக்கை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்**

-----------------------------------------------------------------------

**மாற்றப்படாத காசோலைகள்**

-------------------------------------------

வழங்கப்பட்டிருந்த போதிலும் ஆறு மாதங்களிற்கு மேலாக கொடுப்பனவுக்கு சமர்பிக்கப்படாதிருந்த 48 காசோலைகளின் பெறுமதி ரூபா 221,757 ஆக காணப்பட்டது. இது தொடர்பில் நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9** **மனிதவள முகாமைத்துவம்**

---------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

-----------------------------------------------------------------------------

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 01 | 01 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 32 | 20 | 12 |
| (iii) | இரண்டாம் நிலை | 362 | 270 | 92 |
| (iv) | ஆரம்ப நிலை | 56 | 38 | 18 |
| (v) | ஏனையோர் (அமைய) | - | 01 | - |
| | **மொத்தம்** | **451** | **330** | **122** |

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாவட்டச் செயலகத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்படும் 122 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் படம் வரையுனர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட பதவியினரில் உள்ளடங்கியிருந்த போதிலும், இதுவரை அப்பதவிகளுக்கு தகுதியானவர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் நிர்மாண மற்றும் ஒப்பந்த வேலைகளில் ஒரு வினைத்திறனான ஊழிய பயன்பாடு காணப்படவில்லை.

(இ) மாவட்ட செயலக முகாமைத்துவ உதவியாளர் தரம் I இற்கான அங்கீரிக்கப்பட்ட ஆளணி 04 ஆன போதிலும் அப் பதவிக்கு 10 ஆளணியினர் நியமனம் செய்யப்பட்டிருந்தமையால் அப்பதவியில் 06 மேலதிக ஊழியர்கள் காணப்பட்டனர்.